**சுருக்கம்**

சிறுபான்மையினர் நலன் – அனைத்து கிறித்துவப் பிரிவினரையும் உள்ளடக்கிய கிறித்தவர்கள் புனித ஸ்தலமான ஜெருசலேம் சென்று வர நிதி உதவி அளிக்கும் திட்டம் – செயல்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந.ஆபி) துறை**

**அரசாணை (நிலை) எண். 120** **நாள் 25.12. 2011**
**திருவள்ளுவர் ஆண்டு, 2042**
**மார்கழி 9**

**படிக்கப்பட்டது**

சிறுபான்மையினர் நல ஆணையரின் கடித எண் 4328/டிஎம்4/2011,
நாள் 31.5.2011 மற்றும் 22.12.2011.

-------

**ஆணை:**

இஸ்லாமிய மக்களின் ஹஜ் புனிதயாத்திரைக்கு அரசு உதவி செய்வதைப் போன்று, கிறித்துவ மக்கள் மேற்கொள்ளும் ஜெருசலம் புனித யாத்திரைக்கும் அரசு உதவி செய்யவேண்டும் என்று கிறித்துவ சமுதாயத்தினர் அரசிடம் கோரிக்கை வைத்தனர்.

2. 20.12.2011 அன்று சென்னையில் நடந்த கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்றுப் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து ஏற்கெனவே தான் அளித்த வாக்குறுதியை நினைவு கூர்ந்து கிறித்தவர்களின் புனித ஸ்தலமான ஜெருசலேம் சென்று வருவதற்கு அரசு நிதி உதவி அளிக்கும் என்றும், இத்திட்டம் அனைத்து கிறித்துவப் பிரிவினரையும் உள்ளடக்கியதாக அமையும் என்றும், முதற்கட்டமாக 500 கிறித்தவர்கள் ஜெருசலேம் சென்று வர ஏற்பாடு செய்யப்படும் என்றும் அறிவித்தார்கள்.

3. இத்திட்டம் தொடர்பாக சிறுபான்மையினர் நல ஆணையரிடம் கலந்து ஆலோசிக்கப்பட்டதில், இஸ்ரேல் ஏர்லைன் நிறுவனத்தினரால் மும்பையிலிருந்து அம்மான் வழியாக இஸ்ரேலுக்கு சென்று வர இரு வழி விமானக் கட்டணங்களாக ரூ.32,640/- அல்லது ரூ.35,524/- வசூலிக்கப்படுகின்றன என்றும், சென்னையிலிருந்து மும்பை சென்று வர தனியார் விமான நிறுவனங்கள் ரூ.12,000/- வரை கட்டணம் வசூலிக்கின்றன என்றும், எனவே சென்னையிலிருந்து ஜெருசலேம் சென்று வர இரு வழி பயணக் கட்டணம் மட்டும் ரூ.45,000/- முதல் ரூ.47,000/- வரை வசூலிக்கிறார்கள் என்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. மேற்சொன்ன குறிப்புகளின் அடிப்படையில் கிறித்தவர்கள் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேம் செல்வதற்காக பயணி ஒருவருக்கு விமானக் கட்டண உதவித்தொகையாக ஹஜ் புனிதப் பயணத்திற்காக இஸ்லாமியர்களுக்கு மத்திய அரசு அதனுடைய நிதித் தொகுப்பிலிருந்து வழங்குவது போன்று, தமிழக அரசு தனது நிதியிலிருந்து ரூ.20,000/- முதல் ரூ.24,000/- வரை வழங்கலாம் என்றும், இந்த பயணக் கட்டண உதவித்தொகை ஜெருசலேம் புனிதப் பயணத்தை ஏர் இந்தியா மற்றும் இஸ்ரேல் ஏர் விமான சேவைகளின் மூலம் மேற்கொள்ளப்படும் பயணங்களுக்கு மட்டுமே பொருந்துமாறு செய்யலாம் என்றும், இதற்கென முதற்கட்டமாக 1000 நபர்களுக்கு ரூ.2 கோடி மாநில அரசின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யலாம் என்றும், சிறுபான்மையினர் நல ஆணையரகத்தின் மூலம் இது குறித்து விளம்பரம் செய்து விண்ணப்பங்களைப் பெற்று பரிசீலித்து குலுக்கல் முறையில் பயணிகளைத் தேர்வு செய்யலாம் என்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் பரிந்துரை செய்துள்ளார். மேலும், இப்பணிகளை ஒருங்கிணைப்பதற்கு எதிர்காலத்தில் “கிறித்தவர்களுக்கான புனிதப் பயணக் குழு” ஒன்றினை ஏற்படுத்தலாம் எனவும் பரிந்துரைத்துள்ளார்.

5. சிறுபான்மையினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்தது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்தவப் பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள புனித ஸ்தலமான ஜெருசலேம் சென்று வர அரசு நிதி உதவி அளிக்கும் புதிய திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. முதற்கட்டமாக 2011-2012 ஆம் ஆண்டில் 500 கிறித்தவர்கள் ஜெருசலேம் சென்று வருவதற்கு பயணிகளைத் தேர்ந்தெடுத்து, ஒரு பயணிக்கு ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வீதம் 500 பயணிகளுக்கு நிதியுதவி வழங்க மொத்தம் ரூ.1,00,00,000 (ரூபாய் ஒரு கோடி மட்டும்) அரசு ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கு நிதி உதவி வழங்கும் இத்திட்டம் குறித்து விளம்பரம் செய்து விண்ணப்பங்களைப் பெற்று பரிசீலித்து பயணிகளைத் தேர்வு செய்யும் பணியினை மேற்கொள்ளுமாறு சிறுபான்மையினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவுத்தொகை கோரிக்கை எண். 09-06ன் கீழ் துவக்கப்பட்டுள்ள கீழ்காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

> “2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60. ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 800. ஏனைய செலவு – I திட்டத்தில் சேராதது – AV கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்வதற்கான அரசு உதவித் தொகை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.”
> (த.தொ.கு. 2235 – 60 – 800 – AV -0932)

7. மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பிற்கு சிறுபான்மையினர் நல ஆணையர் அவர்கள் மதிப்பீட்டு, ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருப்பார். சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல கணக்கு அலுவலர் மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. இது ஒரு 'புதுப்பணி' குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் கிடைக்கும் வரையில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு செலவு பொது I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான தொகையை முன்பணமாக வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் நிதி (வரவு செலவு பொது I) துறைக்கு இவ்வரசாணையின் நகலோடு அனுப்பி வைக்கும்படி சிறுபான்மையினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தினை 2011-2012 ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையில் சேர்த்திட உரிய வரைவு குறிப்பினை நிதி (வரவு செலவு பொது I)த் துறைக்கு அனுப்புமாறும் சிறுபான்மையினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண். 68099/நிதி (பி(ம)மிபி) துறை, நாள். 25.12.2011–ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1226 (ஆயிரத்து இருநூற்று இருபத்து ஆறு).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கோ. சந்தானம்,**
**அரசுச் செயலாளர்.**